[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 2

அவர்கள் குறைந்த பட்ச சில தேவைகளை, கோரிக்கைகளை வைத்து அரசாங்கத்தில் முறையிட்டால் உடனடியாக அந்தக் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கேற்ற பரிகாரங்களைத் தேடிக் கொடுக்க வேண்டும். உரிய பரிகாரம் காணப்படவில்லை என்றால் இம்மாதிரி வேலை நிறுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும். ஆக, இனிமேலாவது கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடித்தர வேண்டும். இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற இந்த வேலை நிறுத்தத்தினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற பல்வேறு கருத்துக்களை விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சினையில் அடங்கியுள்ள முக்கியத்துவத்தை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆனால் அதனுடைய விவரங்களை பேரவை உறுப்பினர்கள் அறிவார்களேயானால் அந்த வேலை நிறுத்தம் எவ்வளவு அவசரப்பட்டு, எந்தவிதமான விளக்கமும் அரசாங்கத்திடம் பெற முயற்சி செய்யாமல், அசராங்கத்தோடு கலந்து பேசாமல், இப்போது மார்ச் மாதம் என்ற காரணத்தால் இந்த நேரத்தைத் தவிர வேறு நேரம் வாய்ப்பு இராது என்று கருதி 18-ந் தேதி திடீரென்று வேலை நிறுத்தம் நடைபெற்றது என்பதை அவையினர் காணக்கூடும். முதலில் சில விவரங்களைக் கூறுகிறேன்.

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்ஸ்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 5—3—1975-ஆம் நாளன்று சில கோரிக்கைகள் அடங்கிய முறையீடு ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

(1) வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்த்து வேலையில்லாதுள்ள மருத்துவர்கள் அனைவரையும் உடனடியாகப் பணியில் நியமித்தல்;

(2) மனையக மருத்துவர்களின் பயிற்சி உதவித் தொகையை திங்களொன்றுக்கு ரூ. 350 ஆக உயர்த்துதல்;

(3) மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவிக் தொகை வழங்கல் என்ற இந்த மூன்று கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

மனையக மருத்துவர்கள் 18—3—1975-ஆம் நாளன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போவதாக 17—3—1975-ஆம் நாளன்று மாலையில் அறிவிப்புக் கொடுத்தனரென்று மருத்துவ மனைகளின் தலைவர்கள் மருத்துவக் கல்வி இயக்குனருக்குத் தெரிவித்தனர். மனையக மருத்துவர்கள் 18—3—1975-ஆம் நாள் முற்பகல் வேலை நிறுத்தம் செய்தனர். 17-ந்தேதி மாலையில் அறிவித்துவிட்டு 18-ம்தேதி முற்பகல் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் மாணவர்கள் எவ்வளவு பொறுப்புடன் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கிடைத்த தகவல்களிலிருந்து மருத்துவ மனைகள் இயல்பாகச் செயல் பட்டன வென்று தெரிகிறது. புறநிலை நோயாளிகளுக்கும் அகநிலை நோயாளிகளுக்கும் சிகிச்சைப் பணிகள் எவ்விதத் தடங்கலுமின்றி இயல்பான நிலையில் நடைபெற்றன. எவ்விதமான விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெறவில்லை.

சென்னையிலுள்ள அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மகளிர் குழந்தைகள் மருத்துவ மனையில் மொத்தமுள்ள மனையக மருத்துவர்கள் 12 பேரில் 9 பேர் வேலைக்கு வந்தனர். இராயப்பேட்டை மருத்துவ மனையில் அனைவரும் வேலைக்கு வந்தார்கள். வேறுபல மருத்துவ மனைகளில் வரவில்லை.

அரசினர் எப்போதும் அவர்கள் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து வந்துள்ளனர். வேலை வேண்டிக் காத்திருக்கின்ற பதிவு பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கை 28—2—1975–ஆம் நாளுள்ளபடி 1,203 ஆகும். வேலை வேண்டி இருக்கிற மனையக மருத்துவர் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையில் 1972–ம் ஆண்டில் 325 பேரும், 1973–ம் ஆண்டில் 374 பேரும், 1974–ம் ஆண்டில் 308 பேரும் அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 1975–76ஆம் ஆண்டில் சிவில் சர்ஜன் பதவிகள் ஐந்தும், இன்டர்ம் பதவிகள் நாற்பதும் உட்பட சிவில் உதவி மருத்துவர் பதவிகள் 175–க்கு ஒப்பளிப்பு வழங்கிட அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இது தவிர 1975–76 ஆம் ஆண்டில் இயல்பாகப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் பதவிக் காலியிடங்கள் ஏறத்தாழ 150 இதில் சேர்க்கப்படவில்லை. இதையும் சேர்த்துக்கொண்டால் ஏறத்தாழ 300–க்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்படும். வேலையற்றிருக்கும் மருத்துவர்களுக்கு மேலும் வாய்ப்புகள் அளித்திட இயன்ற எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. வேலையற்றுள்ள அனைத்து மருத்துவர்களையும் அரசுப் பணியில் எடுத்துக்கொள்ள அரசிற்கு நிதிநிலை வசதியில்லை.

1974 பிப்ரவரித் திங்களிலிருந்து மனையக மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயிலிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டது. தவிரவும் அவர்களுக்கு விடுதி உணவு ஈட்டுப் படி மாதம் 25 ரூபாய் வழங்கப்பட்டது. ஆக 275 ரூபாய் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. தற்போது பயிற்சி உதவித் தொகையை மாதம் ஒன்றுக்கு 350 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று மனையக மருத்துவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் அரசுக்கு ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். இப்போதுள்ள வறட்சி நிவாரணப் பணிகள் முதலியவற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள நிதி இடர்ப்பாட்டில், அரசு இந்தச் செலவினத்தை உடனடியாக ஏற்க வாய்ப்பில்லை.

சென்னை மருத்துவக் கல்லூரியில் தரம் உயர்த்தப்பட்ட நிறுவனங்களில் மேகநோயியல், கதிர்வீச்சு இயல் மருத்துவம், காது–மூக்கு–தொண்டை, உடற்கூறு இயல், உடலியல், நுண்ணுயிரியல் ஆகிய பாடங்கள் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு